ஸ்ரீ:

ப்லவ ஞூ தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2022

மலர்: 4
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com





திருமழிசையாழ்வார்
தை - மகம்



கூரத்தாழ்வான்
தை - ஹஸ்தம்

ப்லவ ஹூ தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2022

ஸ்ரீ:

மலர்: 4
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

**வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |**
**வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||**

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

நாம் செய்த கர்மங்களுக்கு ஈடாக எம்பெருமான், பலத்தை – ஸுகத்தையோ / துக்கத்தையோ – அளிக்கிறான். இவ்வனுபவங்களை, நேர் நோக்கோடு (positive outlook-உடன்) அணுகினால், மனதில் அமைதி கிட்டும்.

‘பூர்வ ஜந்ம க்ருதம் பாபம் வ்யாதி ரூபேண பாததே’. மீண்டும் கொரோனா அரக்கனின் கோர தாண்டவம்; ‘ஓமைக்ரான்’ என்ற மாற்றுப் பெயரில். நாமும் அலுத்துக்கொள்கிறோம்; அரசும் பகுதி / முழு ஊரடங்கு சட்டம் போட்டு கட்டுப் படுத்த முயல்கிறது. இதன் விளைவாக பொதுமக்களுக்கு பாதிப்பு உண்டாவதைக் காட்டி எதிர்ப்புக் குரல்களும் எழத்தான் செய்கின்றன. ‘எந்த சூழ்நிலையிலும், முதல் பலி, வழிபாட்டுத்தலங்கள்தான்’ என அங்கலாய்ப்பவர்களும் உண்டு. இவ் விதம், எம்பெருமானுக்கு குறைந்தபக்ஷம் பூஜைகள் நடத்தப்படுகின்றனவே தவிர, திருவிழா மாதமான மார்கழியில் பக்தர்களின் நேர்வழிபாட்டுக்கு அனுமதிஇல்லை.

இப்படி துன்பப்படுவது பொதுமக்கள்தான் என நினைக்கிறோம். எம்பெருமானும், ஸேவார்த்திகளை நேரில் கடாக்ஷித்து அருளமுடியாமல் வெதும்புகிறானே, அதை எண்ணிப்பார்த்தோமா! அவனும் கொரோனாவின்பாதிப்புக்கு ஆளாகிறானோ!

அவன்தான் ஸர்வேச்வரனாயிற்றே; உலகின் ஆக்கல் / அழித்தல் இவற்றை லீலையாகச் செய்பவனாயிற்றே; அவன் எதற்கு நம்மோடு ஒக்க கஷ்டப்படுகிறான்.

இதற்கு, ஶ்ரீபகவத் கீதையில் அவன் அருளிய வார்த்தைகளே பதிலாய் அமையும் – ‘‘உலகில் மக்கள் ப்ரஸித்தனான ஒருவனைப் பின்பற்றியே நடப்பர்; வாஸுதேவனான நான் பாதிப்புக்கு உள்ளாகாவிட்டால், பூர்ணமான ஞானமில்லாத சிஷ்ட ஜநங்கள் ‘நாங்கள் மட்டும் ஏன் அல்லல் படவேண்டும்; கண்ணனே பட வில்லையே!’ என நாஸ்திக வாதம் செய்யத்தொடங்குவர்.’’ இதற்காகவே போலும் அவனும் துக்கத்தை ஏறிட்டுக்கொள்கிறான்.

இப்படி யோசித்தோமானால், நம் கஷ்டத்தை மறந்து, நமக்காக துன்பத்தை ஏறிட்டுக்கொள்ளும் எம்பெருமான் பால், அதிக ப்ரீதியுடன் பக்தி செலுத்துவோம்.

இவ்விதழில் வழக்கமான கட்டுரைகள், உத்ஸவங்களின் வண்ணப்படங்களுடன், நம் மாமயிலையின் ஸ்தல புராணம் வடிக்கும் சிறப்புக் கட்டுரை ஒன்று (அரிய நிழற்படங்களுடன்) வெளியாகிறது. இது பெரியோர்களுக்கு நினைவுகளை மலர்விப்பதாயும், இளந்தலைமுறையினர்க்கு இனிய கரும்பாய் சுவை கூட்டுவதாயும் அமையும் என்பது திண்ணம்.

ஸ்ரீ:

# Spike In Pandemic Cases Another Dampener

TRUSTEES' NOTE

'Thai Piranthal Vazhi Pirakkum' is an adage which fits perfectly to temple festivals. With the advent of 'Utharayanam', Utsavams normally resume in temples in full swing, but a spike in Omicron cases and the resultant govt. guidelines mean they are destined to be muted.

Makara Sankranthi (Pongal Pandigai) is the first festival of the month, followed by Kanu Parivettai, Vanabhojana Utsavam, Ratha Sapthami, Thirumazhisai Azhwar Satrumurai, Koorth-Azhwan Satrumurai and Thai-Pushyam. The notable Utsavams that were performed during Margazhi were Thondar AdipPodi Azhwar Satrumurai, Andal Neeraatta Utsavam and Adhyayana Utsavam (with Irapathu spilling over to Thai). It was heartening that the daily Dhanur Maasa goshti drew around 250-300 devotees before the restrictions came into effect.

In view of the restrictions reimposed by the State government, there will be no public Darsan in our Devasthanam from Friday to Sunday every week till further notification. This has again dampened the spirit of not only the devotees but also us, the administrators. We have requested the devotees to co-operate with us during the period and follow Covid protocols very diligently. Please note that entry into the temple will not be allowed without wearing mask.

The completion of 25 years of 'Kruthika Parayanam' for the wellbeing of the world, organised in our temple, is a rare happening. More than 20 Vedic scholars participated in the Kainkaryam and chanted the four Vedas for a Mandalam (48 days). The Parayanam drew to a close in the presence of the Trustees and a well-known philanthropist devotee Sri R. Rajaopal (Eyetex).

Srimath Azhagiyasingar acceded to our request and offered Mangalaasaasanam at our temple on



January 2. Our Devasthanam accorded special honour to the seer and also a fitting Sambhavana to him as well as his Kainkaryaparas.

In association with the Devasthanam, the Carnatic Premier League organised a traditional musical event called 'Paddhathi Music Fest 2021' in our Desika Bhavanam premises for about 8 days during Dec-Jan.

As is the custom, the Vedaparayana Sabha arranged for a daily ThirupPavai Upanyasam during Margazhi. Sri U.Ve. Nelvoy Sowmyanarayanacharyar Swami delivered the discourse on the topic 'Thiruppavaiyil Desikapadesam'. He was honoured by the Devasthanam and the Vedaparayana Sabha in a befitting manner.

A devotee of the temple has donated a pair of Golden Padmam studded with radiant stones to Goddess Alarmelmangai Thayar. We thanked and accorded a special honour to his family for the generous gesture. We also pray to the Divya Dampathi to bestow them with bountiful blessings.

# ப்லவ வருட தை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி / பிப்ரவரி | தை | | | | | |
| 15.01.22 | 2 | த்ரயோதசி | சனி | ம்ருகசிரீஷம் | கனு உத்ஸவம் – காலை பெருமாள், தாயார், ஆண்டாள் ஆஸ்தானம். மாலை இராப்பத்து உத்ஸவம் 3ம் நாள். பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | கனு உத்ஸவம் – ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா. இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 16.01.22 | 3 | சதுர்தசி | ஞாயிறு | திருவாதிரை | இராப்பத்து உத்ஸவம் 4ம் நாள். பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 17.01.22 | 4 | பௌர்ணமி | திங்கள் | புனர்வஸு | இராப்பத்து உத்ஸவம் 5ம் நாள். பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 18.01.22 | 5 | ப்ரதமை | செவ்வாய் | புஷ்யம் | இராப்பத்து உத்ஸவம் 6ம் நாள். பெருமாள், நம்மாழ்வார், ஸ்வாமி தேசிகன் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட். தை புஷ்யம் – வேதபாராயண ஸபா |
| 19.01.22 | 6 | ப்ரதமை / த்விதீயை | புதன் | புஷ்யம் / ஆயில்யம் | இராப்பத்து உத்ஸவம் 7ம் நாள். பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 20.01.22 | 7 | த்விதீயை / த்ருதீயை | வியாழன் | ஆயில்யம் / மகம் | இராப்பத்து உத்ஸவம் 8ம் நாள். பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. காலை – திருமழிசை ஆழ்வார் சாற்றுமுறை, புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட். திருமழிசை ஆழ்வார் சாற்றுமுறை – A.V. ராமன் – A.V. முகுந்தன் |
| 21.01.22 | 8 | த்ருதீயை / சதுர்த்தி | வெள்ளி | மகம் / பூரம் | இராப்பத்து உத்ஸவம் 9ம் நாள். பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22.01.22 | 9 | சதுர்த்தி / பஞ்சமி | சனி | பூரம் / உத்தரம் | இராப்பத்து உத்ஸவம் 10ம் நாள். காலை பெருமாள், நம்மாழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள், நம்மாழ்வார் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், நம்மாழ்வார் திருவடி தொழுதல். சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 23.01.22 | 10 | பஞ்சமி / ஷஷ்டி | ஞாயிறு | உத்தரம் / ஹஸ்தம் | இயற்பா ஸேவாகாலம், சாற்றுமுறை. காலை கூரத்தாழ்வான் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | இராப்பத்து உத்ஸவம் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட். கூரத்தாழ்வான் சாற்றுமுறை P.V. ராகவன் பண்ட், C/o. மது தேசிகன் |
| 24.01.22 | 11 | ஸப்தமி | திங்கள் | ஹஸ்தம் / சித்திரை | தேசிக ப்ரபந்தம் ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 25.01.22 | 12 | அஷ்டமி | செவ்வாய் | சித்திரை / ஸ்வாதி | திருப்பல்லாண்டு தொடக்கம் | S.S. ராகவன் |
| 26.01.22 | 13 | நவமி | புதன் | ஸ்வாதி / விசாகம் | கனு பாரிவேட்டை உத்ஸவம் – காலை திருமஞ்சனம். மாலை பெருமாள் புறப்பாடு | தேவஸ்தானம் |
| 27.01.22 | 14 | தசமி | வியாழன் | அநுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 28.01.22 | 15 | ஏகாதசி | வெள்ளி | கேட்டை | காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம். மாலை ஏகாதசி – பெருமாள், தாயார் புறப்பாடு, ஆஸ்தானம் சாற்றுமுறை | ஏகாதசி – ஸ்ரீ V.R. ஸ்ரீநிவாஸன். தை வெள்ளிக்கிழமை – உபயம் ஸ்ரீ G. ரங்கராஜன் |
| 29.01.22 | 16 | த்வாதசி | சனி | மூலம் | திருமால்வடை | |
| 30.01.22 | 17 | த்ரயோதசி | ஞாயிறு | பூராடம் | வனபோஜனம் உத்ஸவம். காலை திருமஞ்சனம், புறப்பாடு. | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| 31.01.22 | 18 | சதுர்த்தி / அமாவாசை | திங்கள் | உத்தராடம் | தை அமாவாசை | |
| 01.02.22 | 19 | அமாவாசை | செவ்வாய் | ச்ரவணம் | கோவில் அமாவாசை. காலை பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தேசிகன் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | கோவில் அமாவாசை – ஸ்ரீ எஸ். நாராயணன். ச்ரவணம் – ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் குடும்பத்தினர் |
| 02.02.22 | 20 | ப்ரதமை | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 03.02.22 | 21 | த்விதீயை | வியாழன் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்சனம். மாலை புறப்பாடு | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04.02.22 | 22 | த்ருதீயை | வெள்ளி | பூரட்டாதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் கஜலக்ஷ்மி வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம். | தை வெள்ளி – S. ஸுந்தரம் |
| 05.02.22 | 23 | சதுர்த்தி | சனி | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 06.02.22 | 24 | பஞ்சமி | ஞாயிறு | ரேவதி | திருமால்வடை | |
| 07.02.22 | 25 | ஷஷ்டி | திங்கள் | அச்வினி | திருமால்வடை | |
| 08.02.22 | 26 | ஸப்தமி | செவ்வாய் | பரணி | ரத ஸப்தமி. காலை பெருமாள் ஸூர்ய ப்ரபை புறப்பாடு. மாலை சந்த்ர ப்ரபை புறப்பாடு | ஶ்ரீ ஜெயகுமார், C/o. கொடவாசல் க்ருஷ்ணன் |
| 09.02.22 | 27 | அஷ்டமி | புதன் | கிருத்திகை | ஶ்ரீ கலியன் | |
| 10.02.22 | 28 | நவமி | வியாழன் | ரோஹிணி | கண்ணன், திருப்பாண் ஆழ்வார் ஆஸ்தானம் | |
| 11.02.22 | 29 | தசமி | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். தை வெள்ளி. மாலை தாயார் தங்கக் கேடயம் உள்புறப்பாடு, ஆஸ்தானம் | |
| 12.02.22 | 30 | ஏகாதசி | சனி | ம்ருகசீர்ஷம் / திருவாதிரை | காலை பெருமாள் திருமஞ் சனம். மாலை புறப்பாடு | ஶ்ரீ M.K. ஶ்ரீதரன் |

## தை மாதத்தில் முக்கிய உத்ஸவங்கள்

**தை வருஷப்பிறப்பு, ஸங்க்ராந்தி** ஜனவரி 14 (வெள்ளி)

**கனு உத்ஸவம், ஆஸ்தானம்** ஜனவரி 15 (சனி)

**திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்** ஜனவரி 20 (வியாழன்)

**இராப்பத்து சாற்றுமுறை நம்மாழ்வார் திருவடித்தொழல்** ஜனவரி 22 (சனி)

**இயற்பா சாற்றுமுறை, கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்** ஜனவரி 23 (ஞாயிறு)

**தேசிக ப்ரபந்த சாற்றுமுறை** ஜனவரி 24 (திங்கள்)

**திருப் பல்லாண்டுத் தொடக்கம்** ஜனவரி 25 (செவ்வாய்)

**பாரிவேட்டை உத்ஸவம்** ஜனவரி 26 (புதன்)

**வனபோஜன உத்ஸவம்** ஜனவரி 30 (ஞாயிறு)

**ரத ஸப்தமி** பிப்ரவரி 8 (செவ்வாய்)

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# கோதையின் குறிப்பு

## பாகவத திருப்பள்ளியெழுச்சி

ஸ்ரீ உ.வே. D. ராமஸ்வாமி ஐயங்கார், வைகுண்டவாஸீ

எம்பெருமானைத் திருப்பள்ளியுணர்த்த (நித்திரையினின்றெழுப்ப) பல அன்பர்கள் பாசுரம் பாடியிருக்கிறார்கள். எம்பெருமானடியார்களைத் துயிலெழுப்பப் பாடலமைத்தவர்கள் சிலரே. அவர்களுள் முக்கிய ஸ்தானம் ஆண்டாளுடையது. திருப்பாவையின் 6 முதல் 15 வரையுள்ள பாசுரங்களின் தனி அழகையும் சிறப்பையும் அறியாதார் இலர்.

அப்பத்துப் பாசுரங்களாலே ஆண்டாள் தனது தோழிமார்களுள் பதின்மரை தனித்தனியே எழுப்புவதாகப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. திருப்பாவைக்கு வ்யாக்யானமிட்டருளியோரும் — இன்றளவும் பொருள் கூறி வருவோரும் கூட — ஒவ்வோர் பாசுரத்தால் ஒவ்வோர் ஆழ்வாரைக் குறிக்கும்படி அப்பாசுரங்கள் அமைந்திருக்கின்றன என்று அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். அது ஆண்டாள் கருத்தே தானா? சில ஆழ்வார்கள் அப்போது அவதரியாமலிருக்க அவர்களையும் குறித்துப் பாடியிருப்பதாகச் சொல்வது ஸம்பாவிதமா? என்று சிலர் ஸந்தேஹிக்கக் கேட்டிருக்கிறேன். அவையெல்லாம் வீண் ஆராய்ச்சியென்றே சொல்லவேண்டும்.

ஏனெனில், ஆக்கியோள் கருத்தும் குறிப்பும் இவ்வண்ணம் இருந்திராவிடினும் நூலில் அமைந்துள்ள சொற்கள் எவ்வளவு பொருள்களைத் தரவல்லன என்பதை ஆராய்ந்து பொருள் கொள்வதும் இலக்கிய முறை. ஒரு நிஷாதவேடனை நிஷேதிக்கப் பேசிய 'மா நிஷாத' என்ற வால்மீகி மஹரிஷியின் சொல் 'திருமாலே' என்று பொருள் தரக் கண்டு கவியும் நாமும் களிக்கிறோம். அதுபோலவே ஆண்டாளுடைய இப்பாசுரங்கள் பல இனிமையான பொருள்களைத் தந்து பல அழகான காட்சிகளை நம் மனக்கண் முன் சித்திரிப்பன. உள்ளுறை பொருளை ஆழ்ந்தனுபவிக்க புதிய அர்த்தங்களைக் கொடுப்பது தானே உயர்ந்த காவியத்திற்கு அறிகுறி. யாதொரு முரண்பாடில்லாமல் சொல்லும் பொருளுமொக்க நின்று அர்த்தங்கள் அமையும் போது அவைகளைப் பார்க்கவும் கொள்ளவும் மறுப்பது ரஸிகர்கள் செய்வதொன்றன்று.

எந்தப் பாசுரம் எந்த ஆழ்வாரைக் குறிக்கிறது என்ற விஷயத்தில் வெகுவாக அபிப்பிராய பேதம் காண்கிறது. அவரவர்கள் அனுபவத்துக்கும் ஆராய்ச்சிக்கும் இணங்கப் பலவாக நிர்த்தேசம் ஏற்படுவது ஸஹஜமே. இம்மாதிரி விஷயங்களில் எவரும் துணிந்து இந்த யோசனை தான் சரி, இது தவறு என்று உறுதியாகக் கூற முடியாது. எந்த நிர்வாஹம் வெகு ஸங்கதமாயும் வெகு அனுபவ ஹேதுவாயுமிருக்கிறதோ அதையே அவரவர் ஏற்றுக்கொள்வது இயல்பு.

சென்ற சில வருஷங்களாக அடியேன் கற்றதையும் கேட்டதையும் கொண்டும் இந்தப் பாசுரங்களை அடியேன் சிற்றறிவுக்கு எட்டியவாறு அனுபவித்த ரீதியைக் கொண்டும் இது விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். எவ்வகையில் யோசித்து இவ்வண்ணம் வகுத்திருக்கிறேன் என்பதைக் காட்ட ஒரு பாசுரத்தை எடுத்துக் கொண்டு இங்கே சுருக்கமாக விளம்ப விரும்புகிறேன்.

*உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்*
*செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்*
*செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்*
*தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்*
*எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்*
*நங்காய் எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!*
*சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்*
*பங்கயக்கண்ணானைப் பாடு, ஏல் ஓர் எம்பாவாய்!*

இது 14-ம் பாட்டு. நம்மாழ்வார் விஷயம் என்று மேலே சொன்னேன். எங்ஙனேயென்னில்:

ஒவ்வொரு பாசுரத்திலும் தோழியை விளிக்கும் சொல்லோ, சொற்களோ அமைந்திருக்கின்றன வாதலால் அவைகளைக்கொண்டு யோசிப்பது முறை. இப்பாசுரத்தில் மூன்று விளிச்சொற்கள் அமைந்திருக்கின்றன, நங்காய், நாணாதாய், நாவுடையாய் என்று. பாசுரத்தின் முற்பாதியால் பொழுது புலர்ந்தது என்பதற்கான ஹேதுக்களைக் கூறி, பிற்பாதியால் அந்தத்தோழியின் குணங்களைக் காட்டவல்ல சொற்களைக் கொண்டு அவளை வர்ணிக்கிறாள் ஆண்டாள்.

**நங்காய்** என்றால் பூர்ணையே, சிறந்தவளே என்று பொருள். ஏனைய ஆழ்வார்கள் அங்கங்களாயும் நம்மாழ்வார் அங்கியாயும் இருப்பவர் என்னுமளவில் இவர் ச்ரேஷ்டர் என்றல்லவோ வைஷ்ணவர்கள் இவரது நிலையை அறிந்திருக்கும்படி! அதைத்தான் 'எங்களை முன்னமெழுப்புவான் வாய் பேசும்' என்று குறிப்பாகக் காட்டப்பட்டிருகிறது. எங்களுக்கு சரீரி (ஆத்ம) ஸ்தானத்தில் உள்ள நீ எழுந்த பின்னரேயன்றோ நாங்கள் எழுந்திருக்க வல்லோம்? அப்படியிருக்க நாங்கள் உணரவும் நீ உணராதிருப்பதே என்று இடித்துக் காட்டுகிறார்களாகவுமாம்.

இப்பாசுரத்திற்கு 'இவையெல்லாவற்றுக்கும் தானே கடவளாய் எல்லாரையும் தானே எழுப்புவதாகச் சொல்லி வைத்து அது செய்யாதே உறங்குகிறாளொருத்தியை எழுப்புகிறார்கள்' என்று ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின் அழகிய அவதாரிகை. ஆழ்வார்களுக்குள் தலைமை வஹிக்க சடகோபனுக்கல்லது யாருக்கு உரிமை? ஆகவே 'நங்காய்' என்ற சொல்லைக்கொண்டு நம்மாழ்வாரைக் கொள்வது யுக்தமே.

**நாணாதாய்** –ஆழ்வார்களுள் நாயிகா பாவமடை யாது போனவர்கள் சிலர். ப்ரேமம் முதிர்ந்து பெண்ணுடையுடுத்துப் பெண் பேச்சில் இழிந்தவர் களுள்ளும் நாணைத் துறக்கத் துணிந்தவர் நம்மாழ்வாரொருவரே. (**'நாணியினியோர் கருமமில்லை'** என்று பேசிய ஆண்டாள் பெண்ணாகவே பிறந்தவளாகையால் அவளை விட்டுப் பிறரையே இங்கே பேசுவது) **''நாண் மடம் அச்சம் நமக்கிங்கில்லை''** என்று மட்டும் பேசக் கற்று மடலெடுக்க முன்வந்த மங்கைமன்னனையும் பிற்படுத்தி நம்மாழ்வார் பலவிடங்களில் நாண் துறந்தமைக்கும் பாசுரமிட்டிருப்பதை நோக்கின் 'நாணாதாய்' என்ற சொல் நம்மாழ்வாருக்கே பொருந்தும் என்று திடமாய்ச் சொல்லலாம். **'மாசறு சோதி'** என்னும் திருவாய்மொழி (5.3) முழுதும் ஆழ்வாரது நாண் துறந்த செயல்களையும் எண்ணங்களையும் காட் டுகின்றன. தென் திருப்பேரை எம்பெருமனிடத்துக் காதல் மிகுத்து **'நாணும் நிறையுமிழந்தும்'**, **'நகரமும் நாடும் பிறவும் தேர்வேன் நாணெனக்கில்லை'** எனப் பேசியும், கொடிமதிள் தென்குளந்தை வண்குடபால் நின்றமாயக்கூத்தன் பக்கல் **'ஞாலமறியப் பழி சுமந்தேன் இனி நாணித்தானென்'** என்றும் அத்**'தேவபிராற்கு என் நிறைவினோடு நாண்கொடுத்தேன் இனியென் கொடுக்கேன்'** என்று அலமந்தும் பலபடியாகத் தாம் லஜ்ஜையை விடுத்து நின்றதைப் பாடுகிறார். தானான தன்மையிலேயே **'நாணமில்லாச் சிறு தகையேன் நானிங்கலற்றுவதென் பேணி வானோர் காண மாட்டாப் பீடுடை அப்பனையே'** என்று பாடியவராதலால் இவரை யன்றி ''நாணாதாய்'' என்ற சொல் எந்த ஆழ்வாரைக் குறிக்கவல்லது?

**நாவுடையாய்** — நம்மாழ்வாருடைய நாவின் பெருமை தமிழ் உலகம் முற்றும் பரவியுள்ளது. **'என் நாவிலின்கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்'** என்று ஆழ்வார் தாமே பாராட்டுமளவில் பெருமை வாய்ந்தது அந்நா. கோச்சோழனுக்கும் பல்லவர் கோனுக்கும் பாடலைப் பகிர்ந்து கொடுத்த திருமங்கையாழ்வாரும் கூட நம்மாழ்வாரைப் போலத் தம் நா காக்கவில்லையென்று தோன்றுகிறதன்றோ? ஆகவே தான் பின்புள்ளார்களெல்லாம் நம்மாழ்வாரின் நாவின் ஏற்றத்தை மறவாது பாடியிருக்கிறார்கள். பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், **'மறைப் பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்து'** என்று ஆழ்வார் செய்த உபகாரத்தைப் புகழுங்கால் பாடுகிறார். நிகமாந்த மஹா தேசிகன் பெருமாள் திருவடிகளுக்குப் பல பெருமைகள் நிற்க, **'அணிகுருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன'** (நம்மாழ்வார் திருநாவால் பாடப் பெற்றிமையுடையன) என்பதைத் தனிப்படப் பாடுகிறார். ஆழ்வார் **'என்னுடை நாவினுளானே'** (1.9.9) என்றும் **'என் நா முதல் வந்து புகுந்து'** (7.9.3) என்றும் பாடி, தம் நாவில் அமைந்தான் எம்பெருமான் என்று பாட, அதை மாற்றி பெரிய பெருமாள் மெய்ம் மலர்பதங்கள் இவ்வாழ்வார் நாவுக்கு விஷயமாய் அமைந்தனவென்பது அவ்வடிகளுக்கோரேற்றம் என்று ஆசார்ய வள்ளல் காட்டுமழகு ஆழ்வார் பெருமையை ஒருபடி உயர்த்தி வைக்கின்றதன்றோ!

ஆகவேதான் நம்மாழ்வாருக்கு, **'நாவீறுடைய பிரான்'** என்று திருநாமம். இன்றளவும் அந்நாமத்தைச் சொல்லித்தான் அரங்க நகரப்பன் இவருக்கு அருளிப்பாடுவது. அரங்கனுக்கே மாலையிட்ட ஆண்டாளும் அந்நாமத்தை உள்ளத்துக்கொண்டு நாவுடையாய் என்று நம் சடகோபனையே கூப்பிடுகிறாள் என்றால் இதில் என்ன தவறு?


பாசுரத்தின் ஆறாவது வரியில் அமைந்த விளிச் சொற்கள் மூன்றும் நம்மாழ்வார் விஷயாமாகப் பொருள்கொள்ளப் பொருத்த முடையனவென்பதை 7, 8-வது அடிகளில் செய்யப்பட்ட வேண்டுகோள் உறுதிப்படுத்துகிறது. இந்தத் தோழியை நோக்கி, **'சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன், பங்கயக் கண்ணானைப் பாடு'** என்று கேட்டுக் கொள்கிறாள் ஆண்டாள். இதை மட்டும் இவளிடத்துக் கேட்டபடியால் இதில் ஒரு தனிப்பட்ட இன்பம் இவளிடத்தில் இருக்க வேண்டும். இது ஒரு அடையாளம். இதையிட்டு அருளிச்செயலை முற்றும் ஒரு முறை பார்த்தோமானால் **'சங்கு, சக்கரம், தாமரைக்கண்'** என்ற இந்த வரிசையை வேறு ஆழ்வார் நியமேன அனுபவித்ததாகக் காணோம். நம்மாழ்வாரோ பன்முறை இப்படியே வரிசையிட்டுப் பாடியிருக்கிறார். **'சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும்'** (5.5.1) **'தவளவொண் சங்கு சக்கர மென்றும் தாமரைத் தடங்கண் என்றும்'** (6.5.1) **'சங்கு சக்கரங்களென்று கை கூப்பும் தாமரைக் கண்ணென்றே தளரும்'** (7.2.1) **'வெள்ளைச் சுரிசங்கொடாழியேந்தி தாமரைக் கண்ணனென் நெஞ்சினூடே புள்ளைக் கடாகின்றவாற்றைக் காணீர்'** (7.3.1) **'சங்கொடு சக்கரம் கண்டுகந்தும் தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும்'** (7.3.3) பராங்குச நாயகியான தசையில் பாடப் பெற்றவை இவையனைத்தும். அந்நாயகியையே இப்பதினாலாம் பாசுரத்தால் காட்டியருளுகிறாள் ஆண்டாள்.

இத்தனை குறிப்புகளும் நம்மாழ்வாரைக் காட்டுகிறபடியால், திருப்பாவையின் 14-ம் பாசுரம் அவ்வாழ்வார் விஷயமென விண்ணப்பிக்கத் துணிந்தபடி.



கைசிக புராண படனம்





திருப்பாவை உபந்யாஸம்

ஸ்ரீ:



தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்







தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்





ஸ்ரீமத் அழகியசிங்கர் மங்களாசாஸனம்





ஸ்ரீமத் அழகியசிங்கர் மங்களாசாஸனம்









ஸ்ரீ:





பகல்பத்து உத்ஸவம்





பகல்பத்து உத்ஸவம்





ஸ்ரீ:

கண்ணுக்கினியன





ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்









திருப்பாவை கோலம்

ஸ்ரீ:

# திருமயிலை ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தான திருத்தலக் குறிப்பு

## (க்ஷேத்ர மாஹாத்ம்யம்)

ஸ்ரீ உ.வே. திருக்கோட்டியூர் ராமாநுஜாசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

**1. கருட புராணத்தில்:-**

''நல்ல உயர்ந்த புஷ்பங்கள், தோட்டங்கள் சேர்ந்த இடத்தைப் பார்த்து அஸுரர்களுக்குத் தலைவனான ''மது'' என்பவன் ''மயன்'' என்றவனைக் கூப்பிட்டு ''இந்த இடம் மிகவும் ரம்யமாக இருப்பதால் இவ்விடத்தில் எனக்கு, நன்றாக உள்ள ஒருநகரத்தை சமைப்பாயாக'' என்று உத்தரவிட அவனும் அவ்வாறே சமைத்தான். அதனால் முதலில் அதற்கு ''மதுபுரீ'' அல்லது ''மயபுரீ'' என்ற பெயர் ஏற்பட்டது. பிறகு ருத்ரன் தன் ப்ரஹ்மஹத்தியின் நீங்குதல் பொருட்டு அங்கு வஸித்து வந்ததால் அதற்கு ''ருத்ரபுரீ'' என்ற பெயர் ஏற்பட்டது.

பிறகு ஒருக்கால் ஸ்கந்தனுடைய வாஹனமான மயில், தான் ஸ்கந்தனை வஹிப்பது பற்றி கர்வமடைய, அதனால் அதை இழந்து இந்த இடத்தில் தபஸ் செய்து மீண்டும் தன் பதவி பெற்றதால் இதற்கு அன்று முதல் ''மயூரநகரீ'' அல்லது ''மயூரபுரீ'' என்ற பெயர் வழங்கப்படுகிறது'', என்று இவ்வரலாறு விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

**2. ப்ரம்மாண்ட புராணத்திலும்:-**

''மஹோததி'' என்ற கீழக்கடலின் வடக்குமூலையில் ஆனந்தம், புஷ்டி இவைகளையுடைய பல ஜனங்களால் மிகவும் நெருக்கமானதும் எல்லாவித ஸௌக்யங்களுடனும் கூடிய தேவபுரீ போன்ற ப்ரஸித்தமான ''மயூரநகரீ'' என்பது இருப்பதாகவும், அதற்கு ''மாயா மாதவீ'', ''வைஷ்ணவீ'' என்ற பெயர்களிருப்பதாகவும், இவ்வாறு பெருமை பெற்ற இந்நகருக்கு வடக்கில் நூறு விற்கடை தூரத்தில் தேவர்களால் பூஜிக்கப்பட்ட ''ப்ருந்தாவனம்'' என்ற அரண்யமிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இதனால் ஆழ்வார்களும், ''ஒப்பவரில்லா மாதர்கள் வாழும் மாடமாமயிலை'', 'தேனமர் சோலை மாடமாயிலை'', ''மன்னுதண் பொழிலும் வாவியும் மதிலும் மாடமாளிகையும் மண்டபமும் தென்னன் தொண்டையர்கோன் செய்த நன் மயிலை'', ''நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை'' என்று இதைப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இதற்கு இன்னும் மஹிமையுண்டு.





இவ்விடத்தில் கருடபுராணத்தில் கூறியபடி ''கைரவிணி'' என்ற ஸரஸ்ஸில் ''பேயாழ்வார்'' என்ற மஹான் அவதரித்து இதற்கு இன்னும் அதிக பெருமையளித்திருக்கிறார்.

இங்கு வெகுகாலமாக எழுந்தருளியிருக்கும் கேசவப்பெருமாள் ஸந்நிதி அருகில் திஅரச்சாரூபியாய் ''ஸ்ரீவேதாந்தவாசிரியன்'' கோயில் கொண்டிருக்கிறார். வேங்கடநாத கண்டாம்சமான அவர் எழுந்தருளியிருக்கும் அவ்விடத்தில் ''கலௌ வேங்கடநாயக:'' என்றபடி ஸ்ரீவேங்கடநாதனும் எழுந்தருளியிருப்பது உசிதமென்றும், ''திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்'' என்றும்,

*''சார்வு நமக்கென்றும் சக்கரத்தான்,*
*தண்டுழாய்த்*
*தார்வாழ் வரைமார்பன் தான் முயங்கும் —*
*காரார்ந்த*
*வானமரு மின்னிமைக்கும் வண்டாமரை*
*நெடுங்கண்*
*தேனமரும் பூமேல் திரு.''*

என்றும் பாடிய பேயாழ்வாரின் அவதார ஸ்தலமாதலால் அவ்விடத்தில் அலர்மேல்மங்கையுடன் ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருப்பது மிகவும் உசிதமென்றெண்ணி, பல மஹான்கள் ஒன்று கூடி ''ஸ்ரீநிவாஸ ஸபை'' என்ற ஓரியக்கத்தை ஏற்படுத்தி ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சட்கோப யதீந்த்ர மஹாதேசிகன் (அஹோபில மடம் 40-ம் பட்டம் அழகியசிங்கர்) முதலிய பெரியோர்களின் மங்களாசாஸனத்து டன் அர்ச்சா ரூபியான ஸ்ரீபேயாழ்வார், ஸ்ரீவேதாந்தவாசிரியன் இவர்களுக்கும் ஸ்ரீநிவாஸ ஸபையாருக்கும் ப்ரத்யக்ஷமாக ரக்தாக்ஷி வருஷம் வைகாசி மாதம்





(08-06-1924) வியாழக்கிழமை, தசமி, ஹஸ்த நக்ஷத்ரம் கூடிய நன்னாளில், ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார் பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று ஆடுவார்களும், நறுநெய் பால்தயிர் நன்றாகத்தூவுவார்களுமாய் ஈட்டங் கொள் அடியார்கள் ஆடிப்பாடி ''வேங்கடவா'' என்றழைக்கும் ஆரவாரங்களுடையதாயும், வேதவொலியும் விழாவொலியும் பிள்ளைக்குழா விளையாட்டொலியுமறாததாயும், வாவியும் மதிளும், மாடமாளிகையும் மண்டபமும் கோபுரங்களும் கோலம் பெற்று விளங்குவதாயுமுள்ள மயூரநகரில் தன் கோலத்திருமாமகளோடு எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக்கொண்டு ஆனந்தநிலைய விமானத்தில் ஸ்ரீநிவாஸன் அவதரித்தான். மேக ச்யாமளமான திருமேனியுடன் அவனைக்கண்டு மழைகளோ வந்ததென்று நினைத்து மயில்களும் ஆட அதனால் இந்நகருக்கு ''மயூரநகரீ'' என்றது அந்வர்த்தமாயிற்று.

''கலியுக வரதன்'' என்று பேர்படைத்த இவ்வெம்பெருமான் வேண்டியவர்களுக்கு மேலும் வாரி வாரி வழங்க ''வரந்தரு மாமணி வண்ணன்'' என்று கொண்டாடப்பெற்ற ''ப்ரஹ்மாவுக்கு வரம் வழங்க உத்தரவேதியுள் உதித்து ''ப்ரணதார்த்திஹரன்'', ''வரதராஜன்'' ''அருளாளன்'' என்ற பேர் பெற்ற எம்பெருமான் ''திருவடி நிலை'' என்ற சேஷன் மூலம் அவனருளையும் கலந்து பேர்பெற்ற பேரருளாளனாக விளங்குவது இவ்வரியதலத்திலே தான். எல்லாவித உத்ஸவங்களையும் ''ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண்பயனாவதே'' என்றபடி உபயவேத கோஷ்டியில் அடியார்களுடன் ஸேவை ஸாதிப்பது கண் பெற்றார் கண்டு உகப்பது மிகவும் அவசியம். இத்துடன் இந்த ஸந்நிதியில்,

*''சங்கமாகடல் கடைந்தான் தண்முகில்காள், வேங்கடத்துச்*
*செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்*
*கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து, ஒருநாள்*
*தங்குமேல் என்னாவி தங்கும் என்றுரையீரே.''*

என்று ஒருநாள் சேர்த்தியை ஆசைப்பட்ட ஆண்டாள் அதை எப்போதும் பெற்று வாழும்படி அவளுக்கும் ஸந்நிதி இருப்பது விசேஷம்.

பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் ஒவ்வொரு கோயிலுக்கும் அதன் அபிவ்ருத்தியின் பொருட்டு மிகவும் அவசியமாக எழுந்தருளப்பண்ணும்படி கூறிய கண்ணன், இங்கு வெண்ணைகு ஆடும் பிள்ளயாய் மிக அழகிய திருக்கோலத்துடன் ஸேவை ஸாதிக்கிறார். அவ்வாறே சக்ரத்தாழ்வானும் இங்கு விளங்குகிறார்.

''புற்பா முதாலப் புல்லெரும்பாதி ஒன்றின்றியே நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்'' என்றும் ''சென்றிடந்தார்க்கிடர் நீக்கிய'' என்றும் புகழப்பட்ட சக்ரவர்த்தித்திருமகன் இலக்குவனோடும், மைதிலியோடும், அநுமனோடும் மிகவும் இளையவனாக யௌவனத்துடன் ''ஸதா பஞ்சவிம்சதி வயஸ்க'' என்றபடி ஸேவை ஸாதிப்பது மிகவும் காணத்தக்கது இங்கு.

அவ்வாறே ''சீற்றத்தோடருள் பெற்றவனடிக்கீழ் புகநின்ற செங்கண்மாலும் (லக்ஷ்மீந்ருஸிம்ஹன்), ''அழகியான் தானே அரியுருவம் தானே'' என்றபடி மிகவும் அழகிய கோலத்துடனும் பிராட்டியுடனும் இங்கு எழுந்தருளியிருப்பதை ஸேவித்து அவனருள் பெறுவது மிக மிக அவச்யமாகும்.

அம்மாதிரியே, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை முதலிய பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் கூறியபடி ஒருபக்கம் ஸுதர்சன பகவானும் மறுபக்கத்தில் ந்ருஸிம்ஹனுமாகிய விக்ரஹத்துடன் ''ஆழியானருள் தருவானமைகின்றான் அதுவுமவனது இன்னருளே'' என்னும்படி மிகவும் வரப்ரஸாதியாக ஸேவை ஸாதிக்கும் ஸுதர்சன பகவானை வழிபட்டு, தங்களின் தீராத நோய்களைத் தீர்த்துக்கொண்டு கிடைக்காத பயனெல்லாம் பெற்று எல்லா ஸௌக்யங்களையுமடைந்து மீளாத பேரின்பத்தையும் அடையாலாம்.





திவ்யதேசங்களையும் தங்கள் இருப்பால் திவ்ய தேசமாக்கும் ஆழ்வார், ஆசார்யர்களின் ஸந்திக்குச் சென்று ''வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர்பெருமான் திருப்பாதம் பணிந்து'' என்றபடி உபய வேதங்களையும் கற்றுத்தெளிந்தவர்களான இவர்களின் அருள் பெற்று, பகவானை அடிபணிந்தால் எல்லா வினைகளும் தீர்ந்து அவனுடன் சேர்ந்து இன்பம் பெற்று வாழ்ந்தவர்களாவோம்.

அவ்விதமே, இத்தலத்திலுதித்து, திருவுடன் பகவானை நேரில் கண்டு நம்மையும் காண வைக்கும் அருட்கொண்டலாயும் நம் வினைகளுக்குப் பேயாயும் ஸேவை ஸாதிக்கும் பேயாழ்வாரையும் ஸேவித்து தம் வினைகளைப் போக்கடித்துக் கொள்ளலாம்.

இவ்வாறே,

*''மண்மிசையோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே*
*கண்ணுற நிற்கிலும் காணகில்லா — உலகோர்கள் எல்லாம்*
*அண்ணலிராமாநுசன் வந்து தோன்றியவப்பொழுதே*
*நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணர்க்காயினரே.''*

என்றும்

''என்னையாளவந்த கற்பகம்'' என்றும் ''தயை கசிந்தோ:'' என்னும்படியும் ஸேவை ஸாதித்தருளும் மெய்ம்மதிக் கடலான திசையனைத்தும் ஏறும் குணனை இராமானுசனை இறைஞ்சினால் ''எனக்காரும் நிகரில்லையே'' என்ற நிலையினைப் பெறலாம்.

இவையனைத்துக்கும் காரணமாய் அந்தணரந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும் நொந்தவரே முதலாகத் நுடங்கி அனன்னியராய் வந்தடையும் வழியை நன்கு காண்பித்தவராயும் தன் தெய்வத்துடன் அருள்பாலிக்கும் தூப்புல் வள்ளலை கண்ணாரக்கண்டு வாயார வாழ்த்தி இம்மையிலேயே ஸுகமனைத்தும் பெற்று, ''இங்கே திரிந்தேர்க்கு இழிக்குற்று என்'' என்றும் ''வைகுண்டவாஸேபி ந மே அபிலாஷ:'' என்னும் பாக்கியத்தைப் பெற்றிடலாம்.

எந்த திவ்யதேசங்களிலும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீதேசிகனுக்கு இல்லாத பெருமை இங்கு ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீதூப்புற்பிள்ளைக்கு உள்ளது. விபவத்தில், தான் ஆராதித்த

*''முன்னிவ்வுலகேழும் இருள்மண்டியுண்ண*
*முனிவரொடு தானவர்கள் திசைப்ப, வந்து*
*பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்*
*பரிமுகமாய் அருளிய பரமன்...''*

தத்காலத்தில் மைசூர் பரகால மடத்தில் ஆராத்ய தைவமாக இருப்பது எல்லாருமறிந்ததே. அவ்வெம்பெருமான், நம் தூப்புல் வள்ளல் வார்ஷிக உத்ஸவத்தின் ஏழாவது திருநாளில் அவர் பரிமுகரை ஆராதிக்கும் ஸமயத்தில் வருடந்தோறும் வஸ்துக்களை அனுப்பி கௌரவிப்பது நம் மறைமுடி வள்ளலொருவருக்கே என்பது மறைக்க முடியாத உண்மை. ஆதலில் தானுகந்த திருமேனியே இங்கு ஸேவை ஸாதிப்பது என்று சொன்னால் மிகையாகாது.


இன்னும், சில வள்ளல்களின் பொருளுதவி கொண்டு ஜீர்ணோத்தாரணம் செய்வதாய் உபக்ரமித்து பாலாலயம் கொண்ட பகவான் இரண்டு வருஷத்துக்குள்ளேயே அவைகளை



செவ்வனே பூர்த்தி செய்துகொண்டு தன்னிடத்தில் பழையபடி எழுந்தருளி அருள்பாலிப்பது எங்கும் காணாதவொன்று.

அவ்வாறே ப்ராகாரங்களில் தன் உபதேசங்களையும் உருவங்களையும், துதிகளையும் சுவர்களில் பதிப்பித்து ஆலயத்தை அழகுடன் அமைத்துக்கொண்டிருப்பது மிகவும் ரஸிக்கத்தக்கது.

எங்குமில்லாமல் தேசிகனுக்குத் தனியாக சமைத்திருக்கும் கண்ணாடியறையும் அதன் பக்கத்தில் உள்ள பெருமாள் கண்ணாடியறையும் உள்ளதைப் பார்க்கலாம், அநந்ய ப்ரயோஜனமாக மற்றையவிடங்களில்லாத படி ஸ்ரீவைஷ்ணவ



ஸ்ரீபாதம் தாங்கிகள் எழுந்தருளப்பண்ணும் அழகையும் இவ்விடத்தில்தான் அநுபவிக்கமுடியும்.

இம்மாநகரின்கண் பலவிடங்களில் எம்பெருமான் ஸ்ரீநிவாஸன் ஸேவை ஸாதித்தாலும் இவ்விடத்தில்தான் பேயாழ்வார், தேசிகன், தற்காலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர்கள், ஆண்டவன் ஸ்வாமிகள், சதுச்சாஸ்த்ர கல்பதரு சேஷாசார்ய ஸ்வாமி, கபிஸ்தலம் ஸ்வாமி முதலிய பல மஹான்களின் மங்களாசாஸனத்தை பெற்று, பிறக்கும் மங்களங்களை உண்டுபண்ணுகிறான் ஸ்ரீநிவாஸன் என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வளவு பெருமைபெற்ற இத்தலத்தை அடியார்கள் ஈட்டங்கொண்டு ஸேவித்து இன்னும் பல பெருமைகளைத் தங்கள் கைங்கர்யங்களால் உண்டாக்கி ''அடைந்தார்க்கல்லலில்லையே'' என்று அல்லல் தீர்ந்து, தாங்களும் க்ருதார்த்தர்களாய், அடியோங்களையும் ''குழுமித் தேவர் குழாம் கைதொழ, சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு என்னெஞ்சுள்ளெழும்'' என்றபடி பகவானிடம் நாட்டங்கொண்டிடச் செய்து பயன் பெற்றவர்களாக்குமாறு அடிபணிந்து ப்ரார்த்திக்கிறோம்.

(இந்த வ்யாஸம் 1984-ம் வருடம் எழுதப்பட்டது; படங்கள் தேவஸ்தானத்தின் 1975-ம் வருடத்திய ஸம்ப்ரோக்ஷண மலரிலிருந்து) ✻

# பெண்ணை ஆற்றங்கரைக் கரும்பு!

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

முதலாழ்வார்களின் திருக்கோவலூர் வைபவம் அனைவரும் அறிந்ததே. இவ்வைபவத்தை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ தேஹளீச ஸ்துதியில் கவி நயத்துடன் கொண்டாடுகிறார்.

அதில் ஒரு ச்லோகம்:

*காஸாரபூர்வ கவிமுக்ய விமர்த்தஜந்மா*
*பண்ணாதடேக்ஷு ஸூபகஸ்ய ரஸோ பஹூஸ்தே|*
*த்வத்பாத பத்மமதுநி த்வதநந்ய போக்யே*
*நூநம் ஸமாச்ரயதி நூதந சர்க்கராத்வம்||*

*[ஸ்ரீ தேஹளீச ஸ்துதி - 7]*

''ஆற்றின் கரையில் பயிராகிச் செழித்த கரும்பை ஆலையில் இட்டுப் பிழிந்து எடுக்கும் சாறானது மிக இனியதாயிருக்கும். அது தாமரையிலிருந்து பெறும் உயர்ந்த தேனுடன் கலந்துவிட்டால் அதன் இனிமைக்கு எல்லையில்லை. பெண்ணையாற்றின் கரையில் செழிப்பாய் வளர்ந்த கரும்பு போல் வீற்றிருக்கிறான் திருக்கோவலூர் எம்பெருமான். அவனை இடைகழியில் முதலாழ்வார்கள் நெருக்கும்பொழுது அனைவரிடமும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடில்லாமல் கலக்கும் அவனுடைய ஸௌசீல்யம் இனிமையான கருப்பஞ்சாறு போல வெளிப்பட்டது. எம்பெருமான் தேனே மலரும் திருப்பாதங்களை உடையவனன்றோ! இந்த திருவடித் தேனுடன் ஸௌசீல்யம் என்னும் கருப்பஞ்சாறு கலந்து, ஒரு புது விதமான சர்க்கரையாக மாறி, வேறு தெய்வத்தையும் உபாயத்தையும் நாடாத பாகவதர்களுக்கு அவன் அனுபவத்தைப் பரம போக்யமாக்குகின்றது.'' என்று ரஸோக்தியாக அருளிச் செய்கிறார் நம் தூப்புல் வள்ளல்.

கரும்பை அப்படியே கொடுத்தால் அதனை அனுபவிப்பது ச்ரமம். சாறாக்கிக் கொடுத்தால்





அப்பொழுது மட்டும் ருசிக்கலாம். அந்தச் சாற்றைக் கற்கண்டாகத் திரட்டிக் கொடுத்தால் எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டே இருக்கலாமன்றோ!

பெண்ணை ஆற்றங்கரையின் மிகவும் செழிப்பான கரும்பாக நிற்கிறான் திருக்கோவலூர் நெடுமால். அவனை மந்தர்களாகிய நம்மால் அப்படியே அனுபவிக்க முடியாது. எல்லையில்லா திருக்கல்யாண குணங்களை உடையவனாயினும் அவையனைத்தும் நிறம் பெறுவது ஸௌலப்ய-ஸௌசீல்யங்களினாலே தானே. ஆதலால் ஓர் இடைகழியில் முதல் ஆழ்வார்களை ஒன்று சேர்த்து, அவர்கள் நடுவில் நின்று, அவர்களால் நெருக்கப்பட்டு கருப்பஞ்சாறாக ஸௌசீல்யத்தை வெளிப்படுத்தி அவ்வாழ்வார்களை அவனனுபவத்தில் ஆழ்த்தினான்.

அவனது எல்லையில்லா ஸௌசீல்யத்துடன் **(ரஸோ பஹூஸ்தே)** அநந்ய போக்யத்வம் **(த்வதநந்யபோக்யே)** என்னும் திருவடித் தேன் கலந்து, ஆழ்வார்களுக்கு அவ்வனுபவம் மிகவும் இனியதான, ஒரு புதுவிதமான சர்க்கரையைச் **(நூதந சர்க்கராத்வம்)** சுவைப்பது போல பரமபோக்யமாய் அமைந்தது. அந்த நூதன சர்க்கரையை ஆழ்வார்கள் அநாதியான தமிழ் மொழியில், சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாதப் பாசுரங்களாகத் திரட்டி மூன்று திருவந்தாதிகள் என்னும் கற்கண்டுகளை நமக்கு அருளினர். எம்பெருமானின்

அர்ச்சாவதார அனுபவத்தில் ஈடுபட்டு அவ்வனுபவத்தை மதுரமான பாசுரங்களினால் பாமாலைகளாக்கிப் பாடும் மார்க்கத்தைத் துவக்கி வைத்தனர்.

வேதங்கள் **''ரஸோ வை ஸ:''** — ''எல்லையில்லா ஆனந்தத்தின் ஸ்வரூபம் மற்றும் உறைவிடம் பரப்ரஹ்மம்'' என்று உத்கோஷிக்கின்றன. ஸ்வாமி திருமங்கையாழ்வார் **''தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு''** என எம்பெருமானின் இனிமைக்கு கரும்பையும் அதன் ரஸத்தையும் ஒரு த்ருஷ்டாந்தமாக இட்டுக் கூறுகிறார். சடகோபனோவென்னில்:-

*முட்டில்பல்போகத்தொருதனிநாயகன் மூவுலகுக்குரிய*

*கட்டியைத்தேனையமுதை நன்பாலைக் கனியைக் கரும்புதன்னை*

*மட்டவிழ் தண்ணந்துழாய் முடியானை வணங்கி அவன்திறத்துப்*

*பட்டபின்னை இறையாகிலும் யான் என்மனத்துப் பரிவிலனே.*

*[திருவாய்மொழி 3-10-3]*

என்று நாமும், தேவர்களும், அவர்களின் தலைவனான இந்திரன், பிரமன் ஈசன் முதலானோரும் பலவகைப்பட்ட போகங்களை அனுபவித்தாலும் ஒவ்வொருவருடைய போகமும் ஓர் அளவுக்கு உட்பட்டதாயும், ஒரு காலத்திலே அழியக்கூடியதாயும் இருக்கும். எம்பெருமானொருவனுக்கே போகமானது ஸ்திரமாய் அளவு கடந்ததாயிருக்கும் என்று ஸ்தாபித்து, தமக்கு அவ்வெம்பெருமானே கற்கண்டு, தேன், அமுது, பால், கனி, கரும்பு ஆகிய இன்சுவைகள் என்று தலைக்கட்டுகிறார்.

கரும்பை நெருக்கிச் சாறெடுத்து வெல்லப் பாகாகக் காய்ச்சினாலும், சர்க்கரையாக்கினாலும் அல்லது அந்தச் சர்க்கரையைக் கற்கண்டாக்கினாலும் அதன் ரூபம் மாறுமேயன்றி அதன் இனிமை குறைவதில்லை.



அதேபோல எம்பெருமான் தன் அவதாரங்கள் மூலம் வெவ்வேறு ஸ்வரூபங்களைத் தரித்துக் கொண்டாலும் அவனது திவ்யமங்கள திருமேனியின் வண்மையும், திருக்கல்யாண குணங்களின் மேன்மையும் அதனடியாக நாம் பெரும் அனுபவத்தின் இனிமையும் எள்ளளவும் குறைவதில்லை! ஸ்வாமி தேசிகன் கவி நயத்துடன் இந்த வைபவத்தை ஸாதிப்பது அந்தக் கற்கண்டுக்கு மேன்மேலும் சுவையைக் கூட்டுகிறது.

தொண்டரடிப்பொடி ஆழ்வார் **''அச்சுவை பெறினும் வேண்டேன்''** என்று காட்டுவது போல தெவிட்டாத கற்கண்டாக எம்பெருமானும், அவனை அனுபவிக்க நம் ஆசார்ய ஸார்வபௌமனின் ஸூக்திகளும் நமக்கு இருக்க வேறு சுவை ஒன்றுதான் தேவைப்படுமோ? ✻

## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் '**ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்**' தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்:
044 - 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.



*With Pranams:*

**Sevilimedu Raghavan,**
Door No. 8, Plot No. 59,
Union Carbide Colony, 4th Street,
Ullagaram, Chennai - 91.

**SVDD thanks Sri Sevilimedu Raghavan & Family for sponsoring this month's issue of Desika Sandesam**




ஸ்ரீ தேசிக பவனத்தில் நடைபெற்ற 'பத்ததி' இசை விழா














ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்